| | | | |
|---|---|---|---|
| Headline | RM100 worth Shopee vouchers for users who pay the TNB bill | | |
| MediaTitle | Tamil Malar | | |
| Date | 15 Oct 2021 | Language | Tamil |
| Circulation | 22,000 | Readership | 180,000 |
| Section | NEWS | Page No | 5 |
| ArticleSize | 280 cm² | Journalist | N/A |
| PR Value | RM 4,317 | | |
| | | | |



# தெனாகா நேஷனலின் பில்களை செலுத்துவோருக்கு ரிம.100 மதிப்புள்ள ஷோப்பி வவுச்சர்கள்

கோலாலம்பூர், அக். 15–

தெனகா நேஷனல் நிறுவனம் TNB Giveaway எனும் தனது புதிய பிரசாரத்தைத் தொடங்கியுள்ளது. இந்த பிரசாரத்தின் கீழ் டிஎன்பி வாடிக்கையாளர்களுக்கு ரிம.100 மதிப்புள்ள ஷோப்பி வவுச்சர்களை வழங்க டிஎன்பி திட்டமிட்டுள்ளது. இந்த ரிம.100 மதிப்புள்ள ஷோப்பி வவுச்சர்களை 500 வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் என்று டிஎன்பி நேற்று ஓர் அறிக்கையில் அறிவித்துள்ளது.




இந்த பிரச்சாரம் செப்டம்பர் 16, 2021 முதல் அக்டோபர் 31, 2021 வரை இயங்கும். ஒவ்வொரு வாடிக்கையாளரும் தங்கள் குடியிருப்பு மின்சார கணக்கை myTNB ஆப்பில் சரிப்பார்க்கலாம்.

இந்த பிரசாரத்தில் பங்குப் பெற்று வெற்றிப் பெறும் வாடிக்கையாளர்களை டிஎன்பி குழு விரைவில் தொடர்புக் கொள்ளும் என்றும் அந்த அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.



இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வெற்றியாளர்களின் பெயர்களை டிஎன்பி அதன் அதிகாரப்பூர்வ அகப்பக்கத்தில் வெளியிடும்.

வெற்றியாளர்களின் பட்டியல் நவம்பர் 2021 இல் myTNB போர்ட்டலில் (www.mytnb.com.my) கிடைக்கும்.

டிஎன்பி–யின் தலைமை சில்லறை விற்பனை அதிகாரி டத்தோ இர் மெகாட் ஜலாலுடின் மெகாட் ஹாசான் கூறுகையில், “மைடிஎன்பி பயன்பாடு 2013இல் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து டிஎன்பி அதன் வாடிக்கையாளர்களிடமிருந்து சிறந்த வரவேற்பைப் பெற்று வருகின்றது” என்றார்.

“இந்த முயற்சிகள் மூலம் டிஎன்பி தனது பயனர்களின் எண்ணிக்கையை 5.3 மில்லியனாக அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை கோவிட்–19 நோய்த்தொற்றுக்கு முன்னர் 1.4 மில்லியநாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

“எனவே, ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களின் சுமைகளை குறைப்பதற்கும் நாங்கள் பல தொழில்நுட்ப கண்டுப்பிடிப்புகளை அறிமுகம் செய்து வருகின்றோம்” என்று அவர் நேற்று ஓர் அறிக்கையில் கூறினார்.

இந்த பிரச்சாரத்தில் பங்கேற்க இரண்டு எளிதான படிகள் உள்ளன. முதலில், வாடிக்கையாளர்கள் இந்த பிரச்சார காலத்தில் மைடிஎன்பி அகப்பக்கத்தில் கட்டணங்களை செலுத்த வேண்டும்.

இரண்டாவது படி, பங்கேற்பாளர்கள் தங்கள் சமூக ஊடகக் கணக்குகளில் மைடிஎன்பி ஏன் தங்கள் விருப்பத்தேர்வு என்று குறிப்பிட்டு, “#ilovemyTNB” என்ற வார்த்தையை டேக் செய்து தனது 15 நண்பர்களுக்கு அனுப்ப வேண்டும்.

மேல் விவரங்களுக்கு வாடிக்கையாளர்கள் மைடிஎன்பியின் அதிகாரப்பூர்வ அகப்பக்கத்தைப் பார்வையிடவும்.